பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

07 10 2024 **MONDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மாலத்தீவு அதிபர் டாக்டர் **Mohammed Muizzu,** பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்து பேசுகிறார்.

2. ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குழுவின் மூன்று நாள் கூட்டம் மும்பையில் இன்று தொடங்குகிறது.

3. சென்னையில் நேற்று நடைபெற்ற இந்திய விமானப்படையின் வான்வழி சாகச நிகழ்ச்சிக்கு தமிழக அரசு நிர்வாக ரீதியிலான முழுஒத்துழைப்பு வழங்கியதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

4. தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு 17 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் கோதுமையை வழங்க அனுமதி அளித்துள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

5. குவாலியரில் நடைபெற்ற முதலாவது டிவெண்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

>>>>><<<<<

ஐந்து நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மாலத்தீவு அதிபர் டாக்டர் **Mohammed Muizzu,** பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து விவாதிக்கிறார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

இந்த பேச்சுவார்த்தைக்கு முன்பாக, குடியரசுத்தலைவர் மாளிகையில் மாலத்தீவு அதிபருக்கு பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்படுகிறது.

பின்னர், மகாத்மா காந்தியின் நினைவிடத்திற்குச் செல்லும் டாக்டர் **Muizzu** மலரஞ்சலி செலுத்துகிறார்.

பின்னர், குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் ஆகியோரையும் சந்தித்து உரையாடுகிறார்.

புதுதில்லியில் தமது நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு, அவர் ஆக்ரா, மும்பை நகரங்களுக்கு நாளை செல்கிறார். புதன்கிழமையன்று பெங்களுருவில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றிலும் அவர் கலந்து கொள்கிறார்.

**>>>>><<<<<**

இடதுசாரி தீவிரவாத குழுக்களால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் நிலைமை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் இன்று புதுதில்லியில் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, பீகார், சத்திஷ்கர், ஜார்க்கண்ட், மஹாராஷ்ட்ரா மற்றும் மத்தியப்பிதேச மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

மேலும், மத்திய அமைச்சர்கள் 5 பேரும், தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் மற்றும் மத்திய மாநில அரசுகளின் உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இடதுசாரி தீவிரவாத குழுக்களின் செயல்பாடுகளை 2026ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முழுமையாக அகற்றும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுக்கள், அதிகமாக செயல்படும் மாநிலங்களில் தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்து வருவதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் காரணமாக, 72 சதவீதம் அளவிற்கு தீவிரவாத நடவடிக்கைகள் குறைந்துள்ளதாகவும், 2024ஆம் ஆண்டில் இதுவரை 202 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 723 பேர் தங்களது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குழுவின் 3 நாள் கூட்டம் இன்று மும்பையில் தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தில், பொருளாதார வளர்ச்சி, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, வட்டி விகிதம் ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகிறது.

நுகர்வோர் விலை குறியீட்டை 4 சதவீதம் முதல் 2 சதவீத அளவிற்குள் கொண்டு வருமாறு மத்திய அரசு ரிசர்வ் வங்கியை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சக்திகாந்ததாஸ் தலைமை வகிக்கிறார்.

மூன்று நாள் கூட்டத்தின் முடிவுகளை வரும் புதன்கிழமையன்று அவர் வெளியிடவுள்ளதாக ரிசர்வ் வங்கியின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டள்ளது.

>>>>><<<<<

இந்திய விமானப்படையின் வான்வழி சாகச நிகழ்ச்சியை சென்னையில் சிறப்பாக நடத்திட, தமிழக அரசு நிர்வாக ரீதியிலான முழுஒத்துழைப்பு வழங்கியதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தமது வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

பல லட்சக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியை மாநில அரசு சரியாக திட்டமிடலுடன் நடத்தவில்லை என்று பிஜேபி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன.

இந்த நிகழ்ச்சிக்காக, மாநிலத் தலைமைச்செயலாளர் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றதாகவும், இதில் இந்திய விமானப்படை அதிகாரிகள் மற்றும் மாநில அரசுதுறை அதிகாரிகள் கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மாநில அரசின் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் பலமுறை நடத்தப்பட்டதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

சென்னை பெருநகர மாநாகராட்சி, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மூலமாக கழிவறைகள் மற்றும் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும், 7 ஆயிரத்து 500 காவலர்கள் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் திரு.மா. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு 17 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் கோதுமையை வழங்க அனுமதி அளித்துள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், வடக்காடு ஊராட்சியில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்துப் பேசிய அவர், தமிழகத்திற்கு மாதந்தோறும் எட்டாயிரம் மெட்ரிக் டன் கோதுமை வழங்கப்பட்டு வருகிறது என்றும் இதை 25 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தி வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது என்றும் கூறினார்.

இதனையடுத்து, இம்மாதம் முதல் 17 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் கோதுமையை வழங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்களில், தகுதியான நபர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருவதாகவும், இதுவரை 17 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழ்நாட்டின் மாநில விலங்காக நீலகிரி வரையாடு திகழ்கிறது.

இந்த வரையாட்டை பாதுகாக்கும் விதத்தில் ஒவ்வோராண்டும், அக்டோபர் 7ஆம் தேதி நீலகிரி வரையாடு தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்த வரையாடுகளின் வாழ்விடம் குறைந்ததாகவும், வேட்டையாடப்பட்டதாலும், இதன் எண்ணிக்கை குறைந்ததாக இயற்கைக்கான சர்வதேச நிதியம் 2015ஆம் ஆண்டு வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழக அரசு இந்த வரையாட்டினை பாதுகாக்கும் விதத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதுகுறித்து, எமது செய்தியாளர் தரும் தகவல்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 47 செகண்டஸ்)

>>>>><<<<<

விஜயதசமி விழாவை முன்னிட்டு, ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் சார்பில் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், மதுரை, தென்காசி, ராணிப்பேட்டை உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு இடங்களில் கொடி அணிவகுப்பு ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

விஜயதசமி, சத்ரபதி சிவாஜி முடிசூடிய 350வது ஆண்டு தினம், அகல்யாபாய் ஹோல்கரின் 300வது ஆண்டு பிறந்த தினம் ஆகியவற்றை முன்னிட்டு, இந்த கொடி அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தின் தலைவர்கள் உரையாற்றினர்.

இந்த அணிவகுப்பை ஒட்டி காவல்துறையினர் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

இஸ்ரேலில் உள்ள **Beersheba-**வில் துப்பாக்கி ஏந்திய ஒருவர், கண்மூடித்தனமாக சுட்டதில் பெண் காவலர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 10 பேர் படுகாயமடைந்தனர்.

>>>>><<<<<

அமெரிக்காவில் **Helene** சூறாவளி காரணமாக, மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனம் பாதிப்படைந்துள்ளதால், அங்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கத் தேவையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேகாலயாவில் பெய்து வரும் கனமழை காரணமாக, **Garo** மலைப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 10 பேர் உயிரிழந்தனர், பல்வேறு இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் மகா கும்பமேளா விழாவின், இலச்சினையை முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் வெளியிட்டார்.

>>>>><<<<<

குஜராத் முதலமைச்சராக 2001ஆம் ஆண்டு இதேநாளில் திரு. நரேந்திர மோடி பதவியேற்ற தினத்தை கொண்டாடும் விதத்தில், அம்மாநிலத்தில் **Vikas Saptah** என்ற பெயரில் மூவாயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை மாநில அமைச்சர் திரு. **Rushikesh Patel** அறிவித்துள்ளார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டிணத்தில் நடைபெறவுள்ள தசரா விழாவிற்கு வரக்கூடிய பக்தர்கள், சமூக அடையாளங்களை வெளிப்படுத்தும் விதத்தில் உடைகள் அணிந்து வருவதை தவிர்க்குமாறு மாவட்ட காவல்கண்காணிப்பாளர் திரு. ஆல்பர்ட் ஜான் கூறியுள்ளார்.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் போதைப்பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஸ்ரே குப்தா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஸ்ரீஆண்டாள் திருக்கோவிலிலிருந்து சூடிக்கொடுத்த மாலை, கிளி, பரிவட்டம் உள்ளிட்டவைகள், திருப்பதி பிரம்மோற்சவ விழாவிற்காக எடுத்துச் செல்லப்பட்டது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

குவாலியரில் நடைபெற்ற முதலாவது டிவெண்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

128 ரன் என்ற இலக்கோடு களமிறங்கிய இந்திய அணி, 11 புள்ளி ஐந்து ஓவரில் வெற்றி பெற்றது.

சஞ்சு சாம்சன் மற்றும் சூரியகுமார் யாதவ் ஆகியோர் தலா 29 ரன் எடுத்தனர்.

ஹர்தீப் பாண்டியா 39 ரன் எடுத்தார்.

பங்களாதேஷ் சார்பில் முஸ்தாபிஸூர் ரஹ்மான், மெஹ்தி ஹசன் மிராஸ் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தியாவின் **Arshdeep Singh** சிறந்த ஆட்டக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரு அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி, நாளை மறுநாள் புதுதில்லியில் நடைபெறுகிறது.

>>>>><<<<<